**தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 248 - இலங்கை மதுவரி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் இலங்கை மதுவரி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதுவரி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமான பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது கீழே குறிப்பிட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் 19 பிராந்திய அலுவலகங்களினால் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் சேகரித்து வங்கியில் வைப்புசச் செய்யப்பட்டிருந்த மதுவரி வருமானத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேண்டுதல் பத்திர கட்டணங்கள், தென்னை மரங்கள் சீவுதல் அனுமதிப்பத்திர கட்டண்ங்கள் மற்றும் | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் அந்த வருமானங்களுக்குரிய அறிக்கைகளை பிராந்திய அலுவலகங்களிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு உள்ள சிக்கல்களின் காரணமாக இந்த வருமானங்களை திசெம்பர் 31 ஆந் திகதியில் கணக்கு வைப்பது கடினமாக உள்ளது. | ஆண்டிற்குரிய மதுவரி வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கள்ளு சேகரிக்கும் நிலைய கட்டணங்களின் மொத்த தொகையான ரூபா 16,385,875 தொகையான வருமானம் மற்றும் புகையிலை வரி வருமானத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 99,650 வருமானம் கணக்குக்குளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | திணைக்களத்தின் 19 பிராந்திய அலுவலகங்களினால் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் சேகரிக்கப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அரசாங்கத்தின் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,256,267 தொகையான வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | அரசாங்க கணக்குகள், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களங்களின் அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வருமானங்களை வகைப்படுத்தும் போது ரூபா 1,930,440 தொகையான குடிப்பதற்கு அல்லாத ஸ்பிரீட் வருமானம் வெளிநாட்டு மதுபான வருமானமாகவும் ரூபா 931,500 தொகையான வெளிநாட்டு மதுபான வருமானம் இறக்குமதி செய்யப்பட்ட மெதனோல் வரி வருமானமாகவும் ரூபா 2,130,000 தொகையான ஸ்டிகர் வருமானம் அனுமதிப்பத்திர வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானங்களை வகைப்படுத்தும் போது தாமதத் தவறினால் அவ்வாறு இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் வருமானங்களை வகைப்படுத்தலினை சரியாக கணக்கீடு செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஒவ்வொரு வருமான மூலத்தின் பிரகாரம் உரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு வகைப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) மீண்டுவரும் செலவுகள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மதுபான ஏற்றுமதியின் அடிப்படையிலான மதுவரிப்ணத்தை தள்ளுபடி செய்தல் 2019 திசெம்பர் 27 ஆந்திகதிய 2155/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு இணங்க வழங்கப்பட்ட 10/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிட்ட இயற்கையில் மாற்றம் செய்யப்படாத குடிப்பதற்கு மற்றும் விற்பனை செய்வதற்காக கருதப்படுகின்ற போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானங்களின் ஏற்றுமதி சம்பந்தமாக மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வரி தள்ளுபடி அறிக்கையின் பிரகாரம் 03 உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பாக 26 சந்தர்ப்பங்களின் போது 12,211,501 லீற்றர் மதுபாரான ஏற்றுமதிக்காக ரூபா 5,152,864,440 தொகையான மதுவரிப் பணத்தை தள்ளுபடி செய்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2022 ஆம் ஆண்டு தொடர்பாக உற்பத்திச்சாலைகளினால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானங்களின் ஏற்றுமதியின் அடிப்படையில் உற்பத்தி வரிகளிலிருந்து உரிய தள்ளுபடிகளை | வரி தள்ளுபடி பெறுமதியினை மதுவரி வருமான தலைப்பின் கீழேயே வருமானத்திலிருந்து எதிரீடு செய்து அடிக்குறிப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளது. | மதுபான ஏற்றுமதிக்குரிய தள்ளுபடியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினாலும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினாலும் வழங்கியுள்ள ஒழுங்குவிதிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | கழித்தன் பின்னர் தேறிய மதுவரி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மதுவரி தள்ளுபடி பொறுமதியானது ஒரு செலவாக வெளிப்படுத்தப்படவில்லை. | | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தள்ளுபடி சம்பந்தமாக உறுதியான கணக்கு நடைமுறை மீளாய்வாண்டின் இறுதி வரை இனங்காணப்படவில்லை. இந்த நிலைமையின் அடிப்படையில் மதுவரித் திணைக்களம் சம்பந்தமாக திறைசேரி கணக்கிலும் மதுபான ஏற்றுமதி அடிப்படையிலான மதுவரி தள்ளுபடி சம்பந்தமான தகல்களை வெளிப்படுத்துதல் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அமைச்சுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானதிற்கு வந்த உடன் மதுவரியினைத் தள்ளுபடி செய்தல் சம்பந்தமாக கணக்கு வைத்தல் இடம்பெறும். | மதுபான ஏற்றுமதி அடிப்படையிலான மதுவரி தள்ளுபடி சம்பந்தான தகவல்கள் கணக்குகளில் காட்டப்படுதல் வேண்டும். |
| (iii) | மதுபான தயாரிப்பாளர்களால் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப்பணம் முழுவதையும் ஒரு வருமானமாகக் கணக்குவைத்து அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரிச்சலுகையை வருமானத்திலிருந்து ஒரு மீள் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதிப்பிரமாணம் 118 இற்கு இணங்க வருமானத்திலிருந்து | வருமானத்திலிருந்து மீளச் செலுத்துதலினை மேற்கொள்வதற்கு தேவையான கட்டுநிதியை வழங்குவதிலுள்ள சிக்கல் மற்றும் நி.பி 118 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தலில் நடைமுறைச் சிக்கல் காணப்பட்டதனால் அதற்காக பொருத்தமான செலவுத் தலைப்பின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை | நிதிப்பிரமாணம் 118 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளச் செலுத்தும் அதிகாரம் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கும் வகையில் சட்டரீதியான ஏற்பாட்டினை வழங்குதல் பொருத்தமானது என திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (iv) | ஏற்றுமதி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்குரிய வரிப்பணத்தை மீளச் செலுத்துவதற்காக மதுவரித் திணைக்களத்திற்கு பொருத்தமான ஒரு செலவு விடயத்தினை வழங்கி அதற்கு தேவையான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து தருமாறும் அச்செலவு விடயத்தின் மூலம் மதுவரி தள்ளுபடியினை கணக்கீடு செய்வதற்காக தேவையான அங்கீகாரத்தினை வழங்குமாறும் நிதி அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் | அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் கொடுப்பனவு செய்யும் போது காணப்பட்ட சிக்கலின் காரணமாக தற்பொழுது காணப்படுகின்ற நடைமுறையை பின்பற்றத் தீர்மானிக்கப்பட்டது. | —மேற்படி- |

இறுதிவரை மீளச் செலுத்தலுக்காக ஒரு செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) ஸ்டிகர் செயற்திட்டத்திற்கான கொடுப்பனவுகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஸ்டிகர் செயற்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு ஸ்டிகர் மற்றும் ஸ்டிகர் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபித்தல், உரிமை, மற்றும் செயற்படுத்துதல் அடிப்படையில் ஸ்டிகர் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒரு வெளிநாட்டு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையான கொடுப்பனவுகளைப் பரீட்சித்த போது உள்நாட்டில் தயாரித்த மதுபானங்களுக்காக அச்சிடப்பட்ட 217,210,000 ஸ்டிகர்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்காக அச்சிட்ட 12,016,135 ஸ்டிகர்களுக்காக ஒப்பந்த கம்பனிக்கு முறையே ரூபா 494,921,349 மற்றும் ரூபா 14,495,480 தொகைகளும் 375,500,000 டிஜிடல் குறியீடுகளுக்காகவும் ஒப்பந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய | உரிய திகதியில் அமெரிக்க டொலர் 500,000 மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் தற்பொழுது அமெரிக்க டொலர் 2,118,374 செலுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க டொலர் 879,621 இற்குரிய விலைப்பட்டியல்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளது. 500,500,000 டிஜிடல் குறியீடுகளுக்காக ஒப்பந்த கம்பனிக்கு அமெரிக்க டொலர் 2,997,995 பணத்தில் தற்பொழுது அமெரிக்க டொலர் 2,118,374 செலுத்தப்பட்டுள்ளதுடன் அமெரிக்க டொலர் 879,621 இற்குரிய விலைப்பட்டியல்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் இணங்கிக் கொண்ட விடயப்பரப்பின் கீழுள்ள அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு எழுத்துமூல உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் 2,249,245 பதணத்தில் அமெரிக்க டொலர் 500,000 மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. கொடுப்பனவை அங்கீகரிக்கும் போதும் சான்றுபடுத்தும் போதும் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக் கொண்ட அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ii) | மதுபானம் தயாரிக்கும் கம்பனியிடமிருந்து ஒரு அச்சிட்ட ஸ்டிக்கருக்கும் டிஜிடல் குறியீட்டிற்குமாக அறவிடப்படுகின்ற ரூபா 2 பணத்தை மிகைத்து ஒப்பந்தக் கம்பனியிடமிருந்து ஸ்டிகரினை கொள்வனவு செய்வதற்கு அச்சிட்ட ஸ்டிகருக்கு ரூபா 2.27 வீதமும் டிஜிடல் குறியீட்டிற்காக ரூபா 2.19 வீதமும் செலவாகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | டொலரின் பெறுமதி வேகமாக அதிகரித்ததனால் நிறுவனத்திற்கு ரூபா 2 பணத்தை மிகைத்து கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டது. ஒரு ஸ்டிகருக்கு அறவிடப்படுகின்ற ரூபா 2 பணத்தை அதிகரிப்பதற்காக நிதி அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும் பாதுகாப்பு முகாமைத்துவ குழுவிற்கும் ஸ்டிகரின் விலையை அதிகரிப்பதற்கான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கொள்வனவு செய்தல் கிரயம் மற்றும் ஸ்டிகர் விற்பனை வருமானத்தின் தரவுகளை பகுப்பாய்வு செய்து அரசாங்கத்திற்கு சாதகமான வகையில் செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஸ்டிகருக்காக வெளிநாட்டுப் பணமாக ஒப்பந்த கம்பனிக்கு செலுத்தும் போது மேலதிக வங்கித் தரகு மற்றும் சேவைக் கட்டணத்துடன் கிரயம் இன்னும் அதிகரிக்கலாம் என்பதனால் இதிலிருந்து திணைக்களத்திற்கு ஏற்படும் நட்டத்தை நீக்கிக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**(இ) வைபப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மிளாய்வாண்டின் திசெம்பர் மாதம் மதுவரி திணைகளத்தின் பிராந்திய அலுவலகங்களிடமிருந்து பெற்ற 04 பிணை வைப்புக்கள் தொடர்பாக ரூபா 363,250 மொத்த தொகையான பிணை வைப்பு பணம் 6000-0-0-1-0-122 ஆம் இலக்க பிணை வைப்பு கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் அந்த வருமானங்களுக்குரிய அறிக்கைகளை பிராந்திய அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்களின் காரணமாக இந்த வருமானத்தை திசெம்பர் 31 இல் கணக்கு வைக்க முடியாதுள்ளது. | பிராந்திய அலுவலகங்களிடமிருந்து வருமானத் தகலவ்களைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திணைக்களத்தின் 19 பிராந்திய அலுவலகங்களினால் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் 0007041628 ஆம் இலக்க கணக்கிற்கு சேகரிக்கப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 28,716,637 தொகை பொதுத்திறை சேரிக்கு குறைத்து தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | பிராந்திய அலுவலகங்களிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கலின் காரணமாக இந்த வருமானத்தை திசெம்பர் 31 இல் கணக்கு வைக்க முடியாதிருந்தது. | திறைசேரி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான கணகக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மதுவரி வருமானத்திற்கு 04 சந்தர்ப்பங்களின் போது செம்மையாக்கிய ரூபா 4,345,717 தொகைக்குரிய நாட்குறிப்பு பதிவுகளும் வருமானத்திலிருந்து மீளச் செலுத்திய ரூபா 1,836,572 தொகைக்கான சான்றுகளும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நாட்குறிப்புக்களின் மூலம் காட்டுவதற்கான இயலுமை இல்லை என தயவாக தெரிவிக்கிறேன். ரூபா 1,836,573 பணம் திறைசேரியின் அங்கீகாரத்துடன் மீளச் செலுத்தப்பட்ட கொடுப்பனவாகும். | கணக்குகளிலான செம்மையாக்கல்கள் தொடர்பாக நாட்குறிப்புக்கள் மற்றும் உரிய சான்றுகளை நிதிக்கூற்று கணக்காய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மிளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட மதுவரி வருமமானம் ரூபா 180 பில்லியனாக இருந்ததுடன் அது மீண்டும் ரூபா 185 பில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 165 பில்லியன் வரி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதனை தொடக்க மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 91.7 சதவீதமும் திருத்திய மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 89.2 சதவீதமும் ஆகும். மீளாய்வாண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் வருமானம் 05 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. . | சமூக மற்றும் அரசியல் சிக்கல் நிலைமையின் அடிப்படையில் அதிகாரம் பெற்ற இடங்கள் மூடப்பட்டமை, எரிபொருள் தட்டுப்பாட்டினால் உருவாகிய போக்குவரத்துப் பிரச்சினை, சுற்றுலா தொழில் முயற்சி வீழ்ச்சியடைந்தமை முதலிய விடயங்களின் தாக்கத்தின் அடிபட்படையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் எதிர்பார்த்த வருமான இலக்கினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | சிறந்த மேற்பார்வையினை அமுல்ப்படுத்தி எதிர்பார்த்த வருமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தும் அதற்கிணங்க அதிகாரம் பெற்ற காரமான மதுபான தயாரிப்புக்களின் வருமான இலக்கு திருத்தப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு காரமான மதுபான தயாரிப்புக்களின் தொடக்க வருமான இலக்கு மற்றும் மீளாய்வாண்டின் தொடக்க 09 மாதங்களில் அறவிடப்பட்ட வருமானங்களைப் பரீட்சித்த போது 04 நிறுவனங்களினால் மாத்திரம் 03 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரையான வீச்சில் வழங்கப்பட்டிருந்த இலக்கிடப்பட்ட வருமான இல்லை மிகைக்கப்பட்டிருந்தது. காரமான மதுபான தயாரிப்பு நிறுவனங்களில் | விவேக ஸ்பிரிட் தட்டுப்பாடு, மதுபானங்களின் விலைகளை அதிகரித்தல், வேண்டுதல் குறைவடைதல் உற்பத்திச்சாலை சம்பந்தமான பொருளாதார சிக்கல், தயாரிப்பாளர்களின் கிரயம் அதிகரித்தல், பல்வேறு பராமரிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் உற்பத்திச்சாலைகள் மூடப்படுதல் என்பன | காரமான மதுபான தயாரிப்பு நிறுவனங்களையும் தானிய மதுபான தயாரிப்பு நிறுவனங்களையும் உள்ளடக்கி ஏனைய வருமான மூலங்கள் தொடர்பாக எதிர்பார்த்த வருமான இலக்கினை அடைநது கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கினை அடைந்து கொள்ளாத சதவீதமானது 08 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | வருமான இலக்கினை அடைந்துகொள்ள முடியாமைக்கு தாக்கமளித்திருந்தன. | |
| (இ) | மீளாய்வாண்டில் உத்தரவுபெற்ற 20 காரமான மதுபான உற்பத்திச்சாலைகள் சம்பந்தமாக தொடக்க 09 மாத காலப்பகுதி தொடர்பான தகவல்களைப் பரீட்சித்த போது காரமான மதுபானங்களைத் தயாரிக்கின்ற 18 கம்பனிகள் மொத்த வருமானத்திற்கு 68.80 சதவீத பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன் 89.19 சதவீதமான பங்களிப்பானது 03 கம்பனிகள் மீது தங்கியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் தானிய மதுபானங்களைத் தயாரிக்கின்ற 2 கம்பனிகள் மதுவரி வருமானத்திற்கு 31.20 சதவீத பங்களிப்பை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டு மதுபான இறக்குமதிகளைப் பரீட்சித்த போது இறக்குமதியாளர்களாக பதிவுசெய்யப்பட்ட 33 நிறுவனங்களில் 13 நிறுவனங்கள் 133 சந்தர்ப்பங்களின் போது இறக்குமதி வரியாக ரூபா 172,928,367 அறவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 39 சந்தர்ப்பங்களின் போது ரூபா 120,151,976 வரி வருமானமானது இறக்குமதிச் சந்தையில் 69 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் இரண்டு நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. | இக்கம்பனிகளின் தயாரிப்பு தரமானதுடன் பிரபல்யமானதுமாகும். உயர்ந்த நிதி முதலீட்டின் அடிப்படையில் மதுபானச் சந்தையில் அதிக பங்களிப்பிற்கு காரணமாகும். ஏனைய 15 மதுபானக் கம்கனிகளின் பங்களிப்பு குறைவதற்கு பாவனையாளர் கவர்ச்சி மற்றும் நிதி முதலீட்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் காணப்படல், சந்தை மாற்றத்திற்கு எதிர்விளைவை உண்டாக்கும் மட்டத்தில் ஆராய்ச்சி/ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக உள்ளது. தயாரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலை, இணையதள மட்டத்தில் பெயர் மற்றும் உயர்ந்த தொழில்நுட்பம், பெரிய அளவிலான தொழிற்சாலையாக இருத்தல், தானிய மதுபான தயாரிப்பு நிறுவனங்களின் பங்களிப்பிற்கு காரணமாக இருந்தது. | மதுபான உற்பத்தி வரி வருமானம் மற்றும் ஒவ்வொரு உற்பத்திக் கம்பனியின் சந்தைப் பங்கு அதன் மூலம் மதுவரி வருமானத்திற்கான பங்களிப்பு சம்பந்தமான தகவல்களை மீளாய்வு செய்து பகுப்பாய்வு ரீதியான மீளாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 16 தென்னங்கள்ளு போத்தல் உற்பத்திசாலைகளில் ஒரு உற்பத்திச்சாலை செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மிகுதியான | உற்பத்திகள் விற்பனை செய்யப்படாமையின் அடிப்படையில் சில | இலங்கைக்கு மரபுரீதியான கைத்தொழிலான தென்னங்கள்ளு |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திச்சாலைகளிலிருந்து ரூபா 525,726,800 வருமானமும் 29 பணங்கள்ளு போத்தல் உற்பத்திசாசலைகளில் 05 உற்பத்திசாலைகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் மிகுதி உற்பத்திசாலைகளிலிருந்து ரூபா 46,597,081 வருமானமும் உழைக்கப்பட்டிருந்தது. மேலும் 03 தென்னங்கள்ளு போத்தல் உற்பத்திச் சாலைகளுக்கும் 10 பணங்கள்ளு போத்தல் உற்பத்திச் சாலைகளுக்கும் 03 மாதங்களுக்கும் 10 மாதங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் வருமானம் கிடைத்திருக்கவில்லை. செயற்பாடற்ற நிறுவனங்கள் மற்றும் குறைந்த வருமானத்தை உழைத்திருந்த நிறுவனங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாதங்களில் கள்ளு போத்தல் உற்பத்தி செய்யப்படாமை, கள்ளு போத்தல் உற்பத்திச்சாலைகளுக்கு போதியளவில் கள்ளு கிடைக்காமை அதற்கு தாக்கமளித்துள்ளது. | மற்றும் பனங்கள்ளு உற்பத்தி தொழில் முகங்கொடுக்கின்ற சிக்கல்களை இனங்கண்டு தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக அரசாங்க நிறுவனங்களுடன் ஒன்றிணைந்த திட்டத்தினை அமுல்ப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான மதுவரி அறிவித்தல் 991 இன் பிரகாரம் 23 காரமான மதுபான உற்பத்தி நிறுவனங்களில் 07 நிறுவனங்கள் தொடர்பாக ரூபா 11,237,675 தொகை மதுவரி அறிவித்தலின் கீழ் இடமளிக்கும் எல்லையை மிகைத்து இடம்பெறும் ஏற்றுமதிகளுக்காக வரிப் பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் 17 காரமான மதுபான உற்பத்தி நிறுவனங்களின் ஏற்றுமதிக்காக எதுவித வரிப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க உற்பத்தி நடைமுறைகளின் போது இடம்பெறுகின்ற சேதங்களுக்காக இடமளிக்கும் எல்லையை மிகைத்து இடம்பெறுகின்ற அசாதாரண சேதங்களுக்காக மதுவரிப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமான ஒரு நடைமுறை அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. வெளிக்கள பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட ஒரு உற்பத்திச்சாலையிலிருந்து இடமளிக்கும் எல்லையை மிகைத்து இடம்பெற்றிருந்த 8,307.2 லீற்றர் | சில உற்பத்திச்சாலைகள் மீளாய்வாண்டிற்காக சேதங்களின் மீது வரி செலுத்தலினை மேற்கொண்டுள்ளது. இதுவரை சேதங்கள் மீது வரி அறவிடப்படாத உற்பத்திச்சாலைகள்/ குதங்கள்/ வடிசாலைகள் தொடர்பாக அறவீட்டினை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இடமளிக்கும் எல்லையினை மிகைத்து இடம்பெறும் சேதங்களுக்காக மதுவரிப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக முறையான ஒரு நடைமுறை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தூய்மையான மதுசாரம் தொடர்பான அசாதாரண சேதங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை வரிப் பணம் அறவிடப்படவில்லை. | | |
| (ஊ) | கோவைகளைப் பரீட்சித்த போது மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2022 செப்தெம்பர் மாதம் மீண்டும் கொள்கலன்களில் இடப்பட்ட மதுபானங்களுக்காக அறவிடப்பட்ட வரிப்பணத்தை மீளச் செலுத்துதல் என்ற தலைப்பில் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம் ஒரு மதுபான உற்பத்திச்சாலைக்காக மீண்டும் கொள்கலன்களில் இடப்பட்ட 9015 லீற்றர் தூய்மையான மதுபானங்களுக்காக அங்கீகாரத்தினை வழங்குவதற்கு தாக்கமளித்த விடயங்களைக் காட்டாது அறவிடப்பட்டுள்ள ரூபா 30,763,726 மதுவரி வருமானம் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானவை | -மேற்படி- |

**(எ) பீடித் தொழில் தொடர்பாக வரி அறவீடு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் கீழ் தயாரிக்கின்ற அனைத்து பீடிகள் மற்றும் சுருட்டுகளுக்காக வரி விதிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய வரியினை அறவிடும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததானது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி எஞ்சிய ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையிலானதாக இருந்ததன் காரணமாக மீளாய்வாண்டு வரையும் பீடி, சுருட்டு கைத்தொழிலிருந்து வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 2023 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் 2022-12-31 ஆந் திகதி இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற அனைத்து பீடிக்களுக்காகவும் ரூபா இரண்டு தொடர் அளவிற்கு புகையிலை வரியினை அறவிடுமாறு தெரிவித்து 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மதுவரி திணைக்களத்தின் மூலம் பீடி /சிகரெட்/ சுருட்டு சம்பந்தமாக 774 பதிவுசெய்தல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தும் 2022-03- | செயற்படும் மட்டத்தில் இருக்கின்ற நிறுவனங்கள் 585 ஆகக் காணப்பட்டன. பதிவுசெய்தல் | பதிவுசெய்தல் சான்றிதழினை புதுப்பிக்காத நிறுவனங்கள் சம்பந்தமாக |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதி வரை பதிவுசெய்தலினை புதுப்பித்திருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 509 மாத்திரம் என அவதானிக்கப்பட்டதுடன் 265 அனுமதிப்பத்திரதாரர்கள் பதிவு செய்தலினைப் புதுப்பிக்காது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்களா என்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சான்றிதழின் காலம் காலாவதியாகியிருந்த போதிலும் இன்றுவரை பதிவு செய்தல் சான்றிதழின் காலத்தை நீடிக்காத அனைத்து பீடி அல்லது சுருட்டு தயாரிப்பு நிறுவனங்கள் சம்பந்தமாக முறையான பரீட்சிப்பினை மேற்கொள்ளுமாறு அனைத்து மதுவரி அதிகாரிகள் மற்றும் அனைத்து மதுவரி நிலையப் பொறுப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஏ) நிலுவை வருமானம் - மதுவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 176 (1) இன் கீழ் நி.பி 128 (2) (இ) இன் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கைக்கு இணங்க மதுபான தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து ரூபா 5,491,066,488 தொகையும் கள்ளு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து ரூப 7,244,372 தொகையும் வடிசாலைகளிடமிருந்து ரூபா 16,573,335 தொகையுமாக மொத்தமாக ரூபா 5,514,884,195 மதுவரித் திணைக்களத்தினால் அறவிட வேண்டி இருந்தது. அது 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான ரூபா | அறவிட வேண்டிய பணத்தில் 2023-05-15 ஆந் திகதி வரை ரூபா 497,337,372 பணம் நிலுவை வரி மற்றும் மிகைக் கட்டணமாக அறவிடப்பட்டுள்ளது. கள்ளு உற்பத்திச்சாலை களிடமிருந்து 2022-12-31 ஆந் திகதியில் அறவிட வேண்டியிருந்த ரூபா 7,244,372 நிலுவை வரிப் பணம் மற்றும் அதன் மீது அறவி வேண்டிய மிகைக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. வடிசாலைகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,573,335 | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரியையும் தாமதக் கட்டணத்தையும் முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4,550,673,483 நிலுவை வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 964,210,712 அதிகரிப்பு அல்லது அது 21.18 சதவீத அதிகரிப்பு என அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த நிலுவை வரி அதிகரிப்பிற்காக தொடக்க நிலுவை வரிப்பணம் அறவிடப்படாமையின் காரணமாக அதற்காக கணிக்கப்பட்ட தாமதக் கட்டணமும் தாக்கமளித்துள்ளது. | பணத்தில் ரூபா 1,991,075 அறவிடப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதிவரை 04 உற்பத்தி/ வடிசாலை நிறுவனங்களுக்குரிய மொத்தமாக ரூபா 2,389,692,257 வருமானம் 5 ஆண்டுகளுக்கு மேம்பட்ட காலத்திற்குள் அறவீடு செய்ய முடியாதிருந்தது. இதில் 03 நிறுவனங்கள் தொடர்பாக வழக்கு தொடுக்கப்படுவதற்குத் தேவையான தொடக்க விடயங்களை வரைபாக்கும் சந்தர்ப்பத்தில் நிலுவையான மதுவரி மற்றும் தாமதக் கட்டணங்களைச் செலுத்துதல் தொடர்பாக இணக்கப்பாடு உருவாக்கிக் கொள்ளப்பட்டிருந்தும் உரிய நிறுவனங்களினால் அந்த இணக்கப்பாடு மீறப்பட்டு நிலுவை வரி மற்றும் தாமதக் கட்டணங்களைச் செலுத்துதல் தவறவிடப்பட்டுள்ளது. | ஒரு நிறுவனம் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு மதுவரி திணைக்களத்தின் சட்டப் பிரிவிற்கு கோவைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு கம்பனி செலுத்த வேண்டிய நிலுவை வரி மற்றும் மிகைக் கட்டணம் சம்பந்தமாக திருப்திகொள்ள முடியாது எனவும் சுதந்திரமான ஒரு குழு நியமிக்கப்பட்டு பரீட்சிப்புக்களை வேண்டி ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் குழுவின் இறுதி தீர்மான அறிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் இன்னும் ஒரு கம்பனியின் காணப்படுகின்ற வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நிலுவை வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | உற்பத்தி நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ள ஒரு காரமான மதுபான உற்பத்திக் கம்பனி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2021 யூன் 23 ஆந் திகதி உடன்படிக்கை செய்திருந்தது. திணைக்களத்தினால் மீண்டும் உற்பத்தியை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் மீளாய்வாண்டில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின இறுதித் திகதியில் அக்கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வரிப்பணம் ரூபா 1,292,877,138 மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 1,456,079,040 ஆகக் காணப்பட்டது. உடன்படிக்கை செய்யப்பட்டவாறு நிலுவையான தவணைப் பணம் செலுத்த தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | நிலுவையான வரிப்பணம் மற்றும் தாமதக் கட்டணங்களிலிருந்து இணங்கி கொண்ட உடனபடிக்கையின் பிரகாரம் 2 தவணைப் பணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. இன்னும் 7 தவணைப் பணங்கள் நிலுவையாகக் காணப்பட்டன. இந்த நிலுவையான தவணைப் பணத்தை செலுத்துமாறு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தி பல சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனத்துடன் இந்த நிலுவை வரிப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது . | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஐ) நிலுவையான புகையிலை வரி வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 03 நிறுவனங்களால் பதிவுசெய்த சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளாது புகையிலையை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என மதுவரி திணைக்களத்தினால் இலங்கை சுங்கத்திற்கு செய்யப்பட்ட எழுத்து மூல விசாரணைகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த | ஒரு நிறுவனத்திடம் ரூபா 560,550 பணத்தை ரூபா 93,500 படியான 06 சமமான தவணைகளில் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூபா 5,429,350 இனை பிரதிநிதித்துவம் செய்கின்ற மற்றுமொரு நிறுவனம் இன்றுவரை உடன்படிக்கை செய்து கொள்வதற்கு அல்லது பணத்தை | நிலுவை வரிப் பணத்தை உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக் கொண்ட தவணைப் பணத்திற்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உடன்படிக்கையை மீறுதல் சம்பந்தமாக சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 03 நிறுவனங்களில் மொத்தமாக ரூபா 9,836,528 வரிப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது. | செலுத்துவதற்கு விருப்பத்தை வெளியிட்டிருக்காததுடன் சட்டப்பிரிவின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலுவை வரிப்பணமாகிய ரூபா 3,659,128 காணப்பட்ட இன்னுமொரு நிறுவனத்தின் அனைத்து உரிமையாளர்களும் வெளிநாடு சென்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2009 ஒக்தோபர் 26 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 இன் 01 ஆம் இலக்க புகையிலை வரி (பொது) அறிவித்தலின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் பதிவுசெய்தலினை மேற்கொண்டவரினால் புகையிலை வரி அதிகாரச் சட்டம், மதுவரி கட்டளைச் சட்டம் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு வரியினைச் செலுத்த தவறுகையில் பதிவுசெய்யும் சான்றிதழை இரத்துச் செய்தல், இடைநிறுத்துதல், அறிவித்தலினைப் பெறுதல் அல்லது தண்டப்பணத்தை நிர்ணயித்தல் மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அது | அதிகாரச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட தொடக்க காலத்தில் இந்த திணைக்களத்திடம் இறக்குமதியாளர்கள் பதிசெய்தல் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளாது புகையிலையை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் மூன்று இறக்குமதியாளர்கள் உரிய வரிப்பணத்தை செலுத்ததாததன் காரணமாக பதிவுசெய்தல் சான்றிதழினை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. உரிய நிலுவை | புகையிலை வரி (பொது) அறிவித்தலின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படாது இந்த 03 நிறுவனங்களுக்கு முன்னைய ஆண்டுகளின் பதிவுசெய்தல் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. | வரிப்பணத்தை செலுத்துவதற்கு இணங்கிக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஏதாவது சந்தர்ப்பத்தில் உரிய பதிவுசெய்தல் சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டது. | |

**2.2 செலவு முகாமைத்துவம்**

| | **.கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 10 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 376,500,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் மொத்தமாக ரூபா 342,448,827 பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த செலவு விடயங்களின் சேமிப்புக்களின் மொத்தம் ரூபா 34,051,173 ஆகும். அது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதத்திற்கும் 36 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல், ஆண்டு முழுவதும் காணப்பட்ட எரிபொருள் மட்டுப்படுத்தல், கொவிட் தொற்றுநோய், பொருள் தட்டுப்பாடு, கொள்வனவு செய்ய முடியாமை, தொடர்ச்சியாக மின்சார வழங்கலினை பெற்றுக்கொள்ளாமை என்பவற்றினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | திணைக்களத்தின் தூரநோக்கு செயற் பணியின் பிரகாரம் குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மீண்டுவரும் நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 96,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் மொத்தமாக ரூபா 30,419,753 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த செலவு விடயங்களின் சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 8 சதவீதத்திற்கும் 56 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | -மேற்படி- | திணைக்களத்தின் தூரநோக்கு, செயற் பணியின் பிரகாரம் குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளின் கீழான மூலதன நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2019 யூன் | 6,305,135 | மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து சேவையைக் கைவிட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமிருந்து மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 18 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தமாக ரூபா 6,305,135 கடன் அறவிட வேண்டியிருந்தது. மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரின் மற்றும் ஓய்வு பெற்றுச் | இரண்டு உத்தியோகத்தர்களின காணாமல் போன 02 கோவைகளின் கடன் மீதிகளை பதிவழித்தல் சிபார்சு செய்யப்பட்டு அங்கீகாரத்திற்காக நிதி அமைச்சிற்கு அனுப்பிவைத்தலும் ஒரு நபருக்கு கடன் பணத்தை செலுத்துமாறு தெரியப்படுத்துவதற்கும் இரண்டு கடனாளிகளின் பிணையாளர்களிட | தாபன விதிக் கோவை மற்றும் பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 03 (உ) பந்தி | சென்ற ஒரு உத்தியோகத்தரின் கிடைக்க வேண்டிய மீதிகள் மொத்தமாக ரூபா 401,990 தொகை 2 ஆண்டுகளுக்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. மேலும் சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களின் மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 628,329 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | மிருந்து அறவீடு செய்வதற்கும் மிகுதி இரண்டு நபர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கும் இலஞ்ச குற்றம் சுமத்தப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு வழக்கு தீர்ப்புக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 10/20019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் கட்டளைக்கு இணங்க மதுவரி கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு | மதுபான ஏற்றுமதி தொடர்பான மதுவரி தள்ளுபடிக்காக மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பிணையை அல்லது வங்கிப் பிணையை வழங்க வேண்டிய போதிலும் 03 நிறுவனங்களினால் ஏற்றுமதியின் போது வைக்கப்பட்ட பிணைகள் ஏற்றுமதி பெறுமதியினை உள்ளடக்கியிருக்கவில்லை. | உரிய வங்கிப் பிணையை அதிகரித்து சமர்ப்பிக்குமாறு உரிய கம்பனிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | 10/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் கட்டளைக்கு இணங்க மதுவரி கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 6000/0-0-18-0-119 ஆம் இலக்க மற்றும் 6000/0-0-16-0-126 ஆம் இலக்க 02 வைப்புக் கணக்குகளில் முறையே மொத்தமாக ரூபா 3,470,567 தொகையான 02 வைப்புக்களும் மொத்தமாக ரூபா 1,851,627 தொகையான 03 வைப்புக்களும் சம்பந்தப்பட்டவைகள் 2 ஆண்டுகளை மிகைத்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 6000/0-0-18-0-119 ஆம் இலக்க வைப்புக் கணக்கு தொடர்பான 02 வைப்புக்களுக்குரிய ரூபா 3,470,567 மொத்த தொகையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மற்றும் 6000/0-0-16-0-126 ஆம் இலக்க வைப்பு கணக்கு தொடர்பான 03 வைப்புக்களின் ரூபா 1,851,627 மொத்த தொகையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரணமாம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 6000-0-0-1-0-122 ஆம் இலக்க பிணை வைப்புக் கணக்கின் ரூபா 75,689,654 தொகையான 1889 வைப்புக்களில் இன்னும் வைப்புச்செய்யப்பட்டு உரிமை கோரப்படாத மற்றும் வைப்பாக தொடர்ந்தும் பேணப்படும் தேவைப்பாடு இல்லாத 02 ஆண்டுகளை மிகைத்துள்ள வைப்புக்களை இனங்கண்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 6000-0-0-1-0-122 ஆம் இலக்க பிணை வைப்பு கணக்கின் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான 02 ஆண்டுகளை மிகைத்துள்ள ரூபா 75,689,654 பிணை வைப்பினை தீர்த்துவைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட தரப்பினர்களால் உரிமை கோரப்படாத மற்றும் வைப்பாக தொடர்ந்தும் பேணும் தேவைப்பாடு இல்லாத வைப்புக்களை இனங்கண்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்கு செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் படிவத்தின் பட்டோலை viii இல் திணைக்களம் திறந்துள்ள அனைத்து வங்கி கணக்குகளின் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நிலைமை காட்டப்பட வேண்டிய போதிலும் வருமானங்களை சேகரிப்பது தொடர்பாக இலங்கை வங்கியில் பேணப்பட்டிருந்த வங்கி கணக்கு மற்றும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 13,445,283 மீதி தொடர்பான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் படிவத்திலுள்ள பட்டோலை Viii இல் அனைத்து வங்கி கணக்குகளின் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நிலைமை காட்டப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

தூர நோக்கு மற்றும் செயற்பணி சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மதுவரி திணைக்களத்தின் மதுபானங்கள் மற்றும் புகையிலை கைத்தொழிலை முறைப்படியாக ஒழுங்குபடுத்துதலின் மூலம் அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்காக அர்ப்பணிப்புள்ள மிகவும் கௌரவமான மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்க நிறுவனமாக இருத்தல் என்ற தூர நோக்கிற்காக 06 விடயத்தின் கீழ் செயற்பணி காட்டப்பட்டிருந்ததுடன் 12 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான 09 செயற்பாடுகளின் 10 பெறுமதிகள் இனங்காணப்பட்டிருந்தும் ஆபத்து முகாமைத்துவ முறைமை கைத்தொழிலுக்கு நியமம் ஸ்தாபிக்கப்படாமை கள்ளு மற்றும் சகே உற்பத்தி கைத்தொழிலுக்கு நியமம் ஸ்தாபிக்கப்படாமை, மதுவரி அய்வுகூடத்தினை அமுல்ப்படுத்துதலில் தாமதம், வருமான முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதில் | ஆபத்து முகாமைத்துவ முறைமையை ஸ்தாபித்தல், கள்ளு மற்றும் சகே உற்பத்தி கைத்தொழிலக்கு நியமத்தை ஸ்தாபித்தல் மற்றும் மதுவரி ஆய்வு கூடத்தினை அமுல்ப்படுத்துதலினை 2023 ஆம் ஆண்டின் போது துரிதமாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஆபத்து முகாமைத்துவ முறைமை, வருமான முகாமைத்துவ முறைமைகளுக்கும் கள்ளு மற்றும் சகே உற்பத்தி தொழிலுக்குமான நியமத்தை ஸ்தாபித்தல், மதுவரி ஆய்வுகூடத்தினை ஸ்தாபித்தல். |

தாமதம் என்பன எதிர்பார்த்த துாரநோக்கு, செயற்பணி மற்றும் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

## 3.2 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போதும் அதனை அமல்ப்படுத்தும் போதும் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பிரதான வருமான மூலங்களுக்குரிய காரமான மதுபானங்கள் மற்றும் தானிய மதுபானங்களின் உற்பத்தி தொடர்பான உற்பத்தி நிறுவனங்களுக்கு மாத்திரம் இலக்குகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 06 வருமான மூலங்களுக்காக அவ்வாறு இலக்குகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏனைய வருமான மூலங்கள் தொடர்பான மதுவரி வருமன இலக்குகளை தனிதனியாக சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வருமான மூலங்களுக்குரிய இலக்குகள் வழங்கப்படுதல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மதுவரி திணைக்களத்தின் உத்தேச வருமான நிருவாக முறைமை (RASED) என்ற பெயரிலான இந்த முறைமை புதிய மறுசீரமைப்பினை கொண்ட கணனி தகவல் முறைமையை அமுல்ப்படுத்தும் நடவடிக்கை 2020 திசெம்பர் மாத்திலிருந்து ஆரம்பித்து செயற்படும் 15 துறைகளினாலும், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு மொடியூல் 3 இனாலும், 12 உதவி மொடியூல்களினாலும் மதுவரி திணைக்களத்தின் உத்தேச வருமான நிருவாக முறைமையின் மென்பொருள் தேவைப்பாட்டு | அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் அதனை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இன்று வரை அந்த வரைபுக்காக அவர்களின் எழுத்துமூல கருத்துரைகள் அல்லது பிரேரணைகளுடனான SRS ஆவணங்கள் எங்கள் திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை. | உத்தேச வருமான நிருவாக முறைமையை துரிதமாக ஸ்தாபித்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தின் வரைபு 2022 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சின் தகவல் முகாமைத்துவ திணைக்களத்திற்கு அவர்களின் அவதானிப்புக்களுடன் மேம்படுத்துவதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மென்பொருள் முறைமைகளின் விபரமான தேவைப்பாட்டு பொருள் விபரக் குறிப்பினை தயாரித்தல் தாமதமடைந்தமை, அமைச்சின் நிபுணத்துவ சேவைகள் தொடர்ச்சியாக கிடைக்காமை மற்றும் உத்தேச ஆலோசனை சேவைகள் உரிய நிதி ரீதியான பிரேரணைகளுக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தாமதித்தமை முதலிய காரணங்களின் அடிப்படையில் மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு சேவைநாடுனர் வழங்குவதற்குரிய பெறுகை நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடக்க பெறுகை தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டுள்ளது நீர்ப்பாசன முறைகளினூடாக அனுமதிப்பத்திரதாரர்களை மீண்டும் பதிவுசெய்தல் மற்றும் இலத்திரனியல் முறைமைக்கு கொடுப்பனவுகளை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளைத் தயாரித்தல் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் ஆலோனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் காணப்பட்ட பாதகமான சுழ்நிலையை முன்னிட்டு திட்டமிட்டவாறு மென்பொருளை அபிவிருத்தி செய்தலானது 2022 ஆம் ஆண்டின் போது இடம்பெறவில்லை. |

(ஆ) **பாதுகாப்பு குறியிடல் முகாமைத்துவ முறைமை**

| | |
|---|---|
| வரி அல்லது தீர்வைகளை செலுத்தாத மதுபான பாவனையை குறைத்தல், மதுவரி வருமானத்தை தொடர்ந்தும் பாதுகாத்தல் மற்றும் போலி மதுபானங்களைத் தடுத்தலினை தொடக்க குறிக்கோளாகக் கொண்டு 2017 ஒக்தொபர் 17 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் பாதுகாப்பு ஸ்டிகர்களையும் ஸ்டிகர் முகாமைத்துவ முறைமைகளையும் ஸ்தாபித்தல், உரிமை மற்றும் செயற்படுத்தலின் அடிப்படையில் ஸ்டிகர் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் இந்திய ஒப்பந்த கம்பனிக்கு | வழங்கல் சங்கிலியை ஒழுங்குபடுத்தும் அறிக்கைகளுக்கு இணங்க 2021 செப்தெம்பர் மாதம் மற்றும் 2022 ஆம் வருடம் முழுவதும் உள்நாட்டில் உற்பத்தி செய்த மதுபானங்களை சந்தைப்படுத்துவதற்காக அச்சிட்ட ஸ்டிகர்கள் (Paper Base) மற்றும் டிஜிடல் குறியிடல் 551,615,000 அளவானவை உற்பத்திச் சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் வருடம் |

வழங்கி 05 ஆண்டுகள் வரை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்காக 2019 யூலை 20 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற மதுபானங்களுக்காக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதியிலிருந்து ஸ்டிகர் ஒட்டுதல் ஆரம்பிக்கப்பட வேண்டி இருந்தும் தாமதித்து 2022 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. 08 மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்காக டிஜிடல் குறியிடலும் ஏனைய உற்பத்தி நிறுவனங்கள் அச்சிட்ட ஸ்டிகர்களை ஒட்டுதலினை செயற்படுத்தியிருந்ததுடன் சந்தையில் காணப்படுகின்ற மதுபான இருப்புக்களுக்காக பாதுகாப்பு ஸ்டிகர்களை ஒட்டுதல் 2022 ஏப்ரல் 01 ஆந் திகதிக்கு முன்னர் என்பதாக திருத்தம் செய்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. ஸ்டிகர் வருமானம் தொடர்பான விபரமான அறிக்கை மற்றும் மாதாந்த கணக்கு, பொழிப்புக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் மாத்திலிருந்து 2022 திசெம்பர் வரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபனங்களுக்காக பயன்படுத்துவதற்கு அச்சிட்ட ஸ்டிகர்களும் டிஜிடல் குறியிடல்களும் 555,371,052 அளவானவை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,155,016,308 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் ஏற்பாடுகளானது 06 மாத காலத்திற்கு முன்னர் தெரியப்படுத்த வேண்டியிருந்தும் 03 உற்பத்தி நிறுவனங்கள் டிஜிடல் தொழில்நுட்பத்தினை அமுல்ப்படுத்தி மிகவும் குறுகிய காலத்தில் பாதுகாப்பு ஸ்டிகர்களை ஒட்டும் நடைமுறையினைப் முழுவதும் இறக்குமதி செய்த வெளிநாட்டு மதுபானங்களில் ஒட்டுவதற்காக இலக்கமிடப்பட்ட 3,756,052 ஸ்டிகர்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க பொதுவாக 555,371,052 அளவிலான மொத்த அச்சிட்ட ஸ்டிகர்களும் டிஜிடல் குறியிடல்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து ரூபா 1,110,742,104 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | பின்பற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பயன்படுத்தப்பட்ட ஸ்டிகர்கள் தொடர்பாக புதிய உருவாக்கல் திட்டத்தினை உருவாக்குவது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை அறிக்கை இல்லாமை, ஒப்பந்த கம்பனியுடன் காணப்படுகின்ற உடன்படிக்கையானது 2023 செப்தெம்பர் மாதம் முடிவடைவதனால் செயற்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லல் சம்பந்தமான தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் தவறுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் திறைசேரி செயலாளருக்கு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஸ்டிகர்களுக்காக உருவாக்கல் திட்டத்தினை உருவாக்குவதற்காக தற்பொழுது உரிய ஒப்பந்த கம்பனியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது டன் மேலும் இந்த புதிய உருவாக்கல் திட்டம் தொடர்பான பிரேரணை ஸ்டிகர் முகாமைத்துவ குழுவிற்கும் தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | புதிய திட்டத்தினை உருவாக்கி அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | பாவனையாளரிடம் செல்வதற்கு முன்னர் அனைத்து போத்தல்களிலும் அல்லது கேன்களின் மீது அங்கீகரித்த டிஜிடல் குறியிடலினை அச்சிடுவது அத்தியாவசிமான காரணியாக இருந்த போதிலும் உற்பத்திச் சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள டிஜிடல் குறியிடலை அச்சிடும் இயந்திரம் செயற்படாதிருந்ததன் காரணமாக டிஜிடல் குறியிடல் இல்லாமல் சந்தைக்கு வழங்கப்படாதிருக்க | பாவனையாளர்களிடம் செய்வதற்கு முன்னர் போத்தல் மற்றும் கேனின் மீது அங்கீகரித்த டிஜிடல் குறியிடல் அல்லது அச்சிட்ட ஸ்டிகர் காணப்படுதல் அத்தியவசியமான காரணியாகும். எனினும் 02 கம்பனிகள் ஒரு மணித்தியாலத்திற்கு உற்பத்தி செய்கின்ற உற்பத்தி இயலளவு மிகவும் உயர்ந்த பெறுமதியினை கொண்டிருந்ததனால் அக்கம்பனிகளில் டிஜிடல் அச்சடல் இயந்திரங்களிலிருந்து | அவதானிக்கப்பட்டுள்ள டிஜிடல் குறியிடலினை அச்சிடாத நடைமுறைச் சிக்கலினைத் தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும் என்ற பணிப்புரை தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்படவில்லை . | டிஜிடல் குறியிடலை அச்சிடும் போது பல போத்தல்களின் மீது டிஜிடல் குறியிடல் அச்சிடப்படாமை அவதானிக்கப்பட்டது. அந்த நடைமுறைச் சிக்கலினைத் தவிர்த்துக் கொள்வதற்காக தற்பொழுது அப்போத்தல்களை தனியாக இனங்கண்டு மீண்டும் குறியிடலை அச்சிடுதல் மேற்கொள்ளப்படும். மேலும் இச்சிக்கலினைத் தவிர்த்துக்கொள்வதற்காக நவீன இயந்திரங்கள் கருவிகளைப் பயன்படுத்தும் தேவைப்பாடு ஒப்பந்த கம்பனிக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (iii) | டிஜிடல் குறியிடல் நடைமுறையின் கீழ் ஸ்டிகர் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் ஒரு பிரதான கம்பனியின் ஒரு உற்பத்திச் சாலையில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒப்பந்த கம்பனியின் மேற்பார்வையின் கீழ் குறியிடல் இயந்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மதுவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பரீட்சித்தல் குறிப்பு அறிக்கையின் பிரகாரம் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்ட 2022 சனவரி 11 ஆந் திகதியிலிருந்து 2023 சனவரி 31 ஆந் திகதி வரையான காலத்தில் அதாவது அண்ணளவாக | அந்த உற்பத்திச் சாலையில் இச்செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே இயந்திரங்களில் உருவாகிய நடைமுறைச் சிக்கலைத் தவிர்த்து தொடர்ச்சியாக டிஜிடல் குறியிடலின் அச்சிடலை மேற்கொள்வதற்கான நடவடிக்கை தயார்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்களின் நடைமுறைச் சிக்கலினை தவிர்த்துக்கொள்வதற்காக புதிய இயந்திரங்களை அதற்காக கொண்டு வருவதற்கு ஒப்பந்த கம்பனிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | இயந்திரங்களின் நடைமுறைச் சிக்கலினைத் தவிர்த்தக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 13 மாதங்களில் 813 சந்தர்ப்பங்களின் போது அச்சிடல் இயந்திரம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. மதுவரி கட்டளை இலக்கம் 07/2021 இன் பணிப்புரைக்கு இணக்கமற்ற வகையில் 2022 சனவரி 11 அந் திகதியிலிருந்து 2023 சனவரி 31 ஆந் திகதி வரையான காலத்தில் 4,904,369 மதுபான போத்தல்களில் ஸ்டிகர் அச்சிடாது சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | மதுபானங்கள் போலி மதுபான அல்லது உண்மையான மதுபான போத்தல்களாக பொதுமக்கள் இனங்காண்பதற்காக ஒரு மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அறிக்கையிடும் மொடியூலில் சிக்கல் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. திருத்திய மென்பொருள் தொடர்பாக முறையான பயிற்சியை வழங்குவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் பாவனையாளர்களின் அறிவின்மையின் அடிப்படையில் செயற்பாட்டின் போது சிக்கல் உருவாகியிருந்தமை செயற்திட்ட முகாமையாளர் ஒருவர் மென்பொருள் பகுப்பாய்விற்கு இணைத்துக்கொள்ளப்படாமை மற்றும் அறிக்கையிடல் மொடியூலை அபிவிருத்தி செய்தல் | மதுவரி திணைக்களத்தினால் போலி மதுபான போத்தல் அல்லது உண்மையான மதுபான போத்தலை பொதுமக்கள் இனங்காண்பதற்காக ஒரு மென்பொருள் அறிமுக்கப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்திலேயே அதில் மற்றும் அதன் நிகழ்கால மொடியூலில் சிக்கல் காணப்பட்டிருந்தும் தற்பொழுது அந்த அனைத்து சிக்கல்களும் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. | அந்த மென்பொருளின் மற்றும் அறிக்கையிடல் மெடியூலுக்குரிய சிக்கலைத் தீர்த்து வைத்தல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படாமையால் தேவையான போது செயற்பாடுகள் சம்பந்தமாக முழுமையான விபரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை, ஒப்பந்தக் கம்பனி மதுவரி திணைக்களத்தின் அல்லது உற்பத்தியாளர்களின் பௌதீக இருப்பு மெய்மையாய்வுடன் ஒப்பீடு செய்வதற்காக தேவையான வசதிகள் மென்பொருளின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | மாதாந்தம் அரைவாசியாக அச்சிடல் மற்றும் அச்சிடப்பட்டமை தொடர்பான ஒரு அறிக்கையை மொடியுலின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படாமை தேவையான துண்டிப்புக்களுடன் ஒரு நாளுக்கு அச்சிடப்பட்ட டிஜிடல் குறியிடல் அளவினை மெய்மையாய்வு செய்வதற்கான அறிக்கையிடலினை மொடியூலின் மூலம் தொடர்ச்சியாக தொழில்நுட்ப சிக்கல் உருவாகின்றமை, விபரமான டெஸ் பலகை வழங்குதல் ஆகிய தேவையான வசதிகள் வழங்கப்படாமை, மதுவரி திணைக்களத்திற்காக உள்ளபடியாக எதிர்காலத்திற்குப் பொருத்தமான நாளாந்த மற்றும் நீண்கால செயற்பாடுகளை அவதானித்தல் மற்றும் அச்சிடலின் போது நிராகரிக்கப்படுவதனை | மாதாந்தம் அரைவாசியாக அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாமை தொடர்பான அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக துண்டிப்புக்கள் சம்பந்தமாக ஒரு நாளைக்கு அச்சிடப்பட்ட டிஜிடல் குறியிடலின் அளவினை மெய்மையாய்வு செய்வதற்காக விபரமான டேஸ் பலகையை வழங்குவதற்காகவும் நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த டேஸ் பலகை மற்றும் உரிய அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்த நிறுவனத்தினால் தற்பொழுது ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினை ஸ்தாபித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தேவையான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், நாளாந்த செயற்பாடுகளை அவதானிப்பதற்குத் தேவையான டேஸ் பலகையை ஸ்தாபித்தல் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காண்பதற்கான உபாய மார்க்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது தேவையான துணைக் கருவிகள் ஒவ்வொரு மதுவரி உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த மென் பொருட்கள் முறைப்படியாக செயற்படுகின்றன. | |
| (vi) | அச்சிடப்படாத அல்லது அரைவாசியாக அச்சிடப்பட்ட போத்தல்கள், கேன்களை இனங்காண்பதற்கான ஒரு இயந்திரம் அல்லது துணைக்கருவி அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமையின் மூலம் டிஜிடல் குறீயடல் சுயமாக செயற்படுகின்றது என ஒப்பந்தக் கம்பனி வெளிப்படுத்தியிருந்தும் மென்பொருளினூடாக உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் ஒரு நடைமுறை வழங்கப்பட்டிருக்காமை தலைமை அலுவலகத்தின் வழங்கல் சங்கிலியை ஒழுங்குபடுத்தும் பிரிவின் நடைமுறை துண்டிக்கப்படும் சந்தர்ப்பம் தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்தி பேணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முன்னர் குறிப்பிட்டவாறு அச்சிடப்படாத அல்லது அரைவாசியாக அச்சிடப்பட்ட போத்தல்கள் மற்றும் கேன்களை இனங்காண்பதற்காக ஒப்பந்த நிறுவனங்கள் தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களினால் இச்சிக்கலைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினை ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் உற்பத்திசாலையில்அச்சிடப்படாத மற்றும் அரைவாசியாக அச்சிடப்பட்ட போத்தல்கள் மற்றும் கேன்களை இனங்காண்பதற்காக நிராகரிக்கப்படும் வழியை ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் உற்பத்திச்சாலைகளில் இடவசிதிகள் இல்லாமையின் காரணமாக அது இன்னும் அமுல்ப்படுத்தப்படவில்லை. மேலும் இச்சிக்கலைத் தவிர்துக் கொள்வதற்காக ஒப்பந்த நிறுவனத்தில் ஆய்வு மற்றும் பரிசோதனைப் பிரிவினை ஸ்தாபித்ததன் பின்னர் புதிய இயந்திரங்களை பயன்படுத்துதல் தொடர்பாகவும் கவனம் | தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை அமுல்ப்படுத்துவதன் மூலம் இணங்கிக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் முறைமைக்குரிய அனைத்து செயற்பாடுகளும் முறைப்படியாக நிறைவேற்றப்படுகின்றன என்பதனை முகாமைத்துவம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டுள்ளது. | |
| (vii) | 7/2021 ஆம் இலக்க கட்டளை தொடர்பான மதுவரி அறிவித்தலின் 5 (2) ஆம் விதிக்கு இணங்க விமான நிலையம் மற்றும் துறைமுகங்களை உள்ளடக்கிய ஏனைய இடங்களில் அமல்ப்படுத்துகின்ற சுங்கத் தீர்வையற்ற கடைகளுக்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் மீது பிணைக்கப்பட்ட குதங்களில் பாதுகாப்பு குறியீடுகளை ஒட்டும் நடைமுறையானது முறைப்படியாக இடம்பெறுகின்றது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் துாதரக சேவை சிறீலங்கா எயாலைன்ஸ் மற்றும் இலங்கை கேட்டரிங் ஆகிய நிறுவனங்கள் தீர்வையற்ற நிறுவனங்களாக இல்லாத போதிலும் ஸ்டிகர் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ஸ்டிகர்களை பயன்படுத்துவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை உள்ளடக்கிய ஏனைய நிலயங்களில் அமுல்ப்படுத்தப்படுகின்ற சுங்கத்தீர்வையற்ற கடைகளுக்கு வழங்கப்படுகின்ற மதுவரிக்கு உட்படுகின்ற பொருட்களின் மீது பிணைக்கப்பட்ட குதங்களில் பாதுகாப்பு குறியீடுகளை ஒட்டும் நடவடிக்கைகளுக்காக இலங்கை சுங்கம் பொறுப்புக் கூறுதல் வேண்டும். மதுவரி உத்தியோகத்தர்களுக்கு பிணைக்கப்பட்ட குதங்களை பரீட்சிப்பதற்காக அனுமதி இல்லாததுடன் ஸ்டிகர்கள் ஒட்டியதன் பின்னர் தீர்வையற்ற கடைகளில் காணப்படுகின்ற மதுபானப் போத்தல்களைப் பரீட்சிப்பதற்காக மதுவரி உத்தியோகத்தர்களுக்கு அனுமதி உள்ளதுடன் தற்பொழுது மதுவரி உத்தியோகத்தர்களால் அந்த தீர்வையற்ற கடைகளைப் பரீட்சித்தல் இடம்பெறுகின்றது. மேலும், மதுவரித் திணைக்களத்தின் வழங்கல் சங்கிலியை ஒழுங்குபடுத்தும் பிரிவினால் துாதரக சேவை இலங்கை எயார்லைன்ஸ் , இலங்கை கேடரிங் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையான மதுபானங்களுக்கான ஸ்டிகர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பது சான்றுபடுத்தப்பட்டு | தொடர்ச்சியாக கண்காணிப்பினையும் மேற்பார்வையினையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தீர்வையற்ற கடைகளுக்கு வழங்கப்படுகின்ற மதுவரிக்கு உட்படுகின்ற பொருட்கள் மீது பிணைக்கப்பட்ட குதங்களில் பாதுகாப்பு குறியீடுகளை ஒட்டும் நடைமுறையானது முறைப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை முகாமைத்துவம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கையொப்பமிட்ட ஆவணங்கள் வழங்கல் சங்கிலியை ஒழுங்குபடுத்தும் பிரிவினால் கோவைகள் பேணப்படும். | |
| (viii) | ஸ்டிகர்களை கைகளால் ஒட்டும் தேவைப்பாட்டினை முன் அறிந்து கொள்வதற்காக காரமான மதுபானங்களை உற்பத்தி செய்கின்ற 22 கம்பனிகள் மற்றும் தானிய மதுபானங்களை உற்பத்தி செய்கின்ற 02 கம்பனிகள் தொடர்பாக உற்பத்தி தேவைப்பாட்டினை முன் அறிந்துகொள்ளும் போது கட்டளையிடப்பட்ட அளவிற்குரிய மதுபானங்கள், உற்பத்தியாளர்களிடம் உள்ள இருப்பின் அளவு மற்றும் சந்தையில் காணப்படுகின்ற இருப்பின் அளவு தொடர்பாக சரியான முன்னறிதல் தயாரிக்கப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை. மேலும் காணப்படுகின்ற இருப்பிற்காக ஸ்டிகர்களை ஒட்டுதல் 2021 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 10/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் மூலம் 2022 ஏப்ரல் 01 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்தல் காட்டப்பட்டு மீண்டும் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டிற்கான இருப்புத் தேவைப்பாடுடன் பொருந்துகின்ற ஸ்டிகர் இருப்புத் தேவைப்பாடு எவ்வளவு என்ற மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | மதுபான உற்பத்தியாளர்களிடம் உள்ள இருப்பின் அளவினையும் சந்தையில் காணப்படுகின்ற இருப்பின் அளவினையும் முன்னறிந்து ஸ்டிகர்களின் அளவு கட்டளையிடப்பட்டதுடன் இதன் போது உற்பத்தியாளர்களிடம் உள்ள இருப்பின் அளவினை சரியாக முன்னறியக்கூடியதாக இருந்த போதிலும் சந்தையில் காணப்படுகின்ற மதுபான இருப்பின் அளவை சரியாக முன்னறிந்து கொள்ள முடியாது. மேலும் ஸ்டிகர் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் திகதியானது பல்வேறு சிக்கல்களின் காரணமாக காலத்துக்கு காலம் மாற்றமடைந்ததன் காரணமாக சந்தையில் காணப்படுகின்ற மதுபான இருப்பின் அளவினை சரியாக முன்னறிவது கடினமாக இருந்தது.<br><br>2022 ஆம் ஆண்டு முழுவதுக்குமான ஸ்டிகர் இருப்புத் தேவைப்பாடிற்கு நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் காரணமாக சரியான மதிப்பீட்டினை தயாரிக்க முடியாததுடன் உற்பத்திச்சாலைகளிலிருந்து அனுப்பப்படுகின்ற 3 மாத முன்னறிதலினை அடிப்படையாகக் கொண்டு | ஸ்டிகர் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் குறிக்கோளினை இனங்கண்டு கணப்படுகின்ற ஆபத்துக்கான நடைமுறைச் சாத்திய மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஸ்டிகர் இருப்பானது ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (ix) | 2022 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரையும் 08 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்ததமாக 16,595,500 பாதுகாப்பு குறியிடல் சம்பந்தமாக ஒட்டப்பட்ட மொத்த ஸ்டிகர்களின் அளவு சம்பந்தமாக எதுவித அறிக்கையிலும் மிகுதி இருப்பு வழங்கல் சங்கிலிப் பிரிவிற்கு அல்லது ஸ்டிகர் பிரிவிற்கு ஒப்படைக்கப்படாதிருந்தும் உதவி மதுவரி ஆணையாளர் மேல் மாகாணம் (i) மற்றும் (ii) அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தமாக 7,435,000 ஸ்டிகர்களின் அளவில் மொத்தமாக 213,540 ஸ்டிகர்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தும் மிகுதி ஸ்டிகர் இருப்பான மொத்தமாக 7,221,460 ஸ்டிகர்களின் அளவு தொடர்பாக ஒட்டப்பட்டதா அல்லது அலுவலகத்தில் காணப்படுகின்றதா என்பதனை கணக்காயிவிற்கு உறுதிப்படுத்த முடியாமை மற்றும் மேல் மாகாணம் (III) மற்றும் மத்திய மாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஸ்டிகர்களில் மொத்தமாக 2,757,410 ஸ்டிகர்கள் தாமதமாக மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. 930,000 ஸ்டிகர்கள் கணக்காய்வுத் திகதி வரையும் மீள | 8 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்களினால் மிகுதி ஸ்டிகர் அளவு தொடர்பான அறிக்கை வழங்கல் சங்கிலி ஒழுங்குபடுத்தல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகங்களில் கையில் மிகுதியாக ஸ்டிகர் இருப்பு இல்லை எனவும் அனைத்து ஸ்டிகர்களும் ஒட்டி முடிவடைந்துள்ளது எனவும் விசாரணையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைக்கப்பட்டிருக்கவில் லை என அவதானிக்கப்பட்டது. | |
| (இ) | 02 வடிசாலைகளுக்காக 2021 மற்றும் 2022 ஆம் அண்டுகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் அனுமதிப்பத்திர காலம் முறையே 11 சந்தர்ப்பங்களிலும் மற்றும் 09 சந்தர்ப்பங்களிலும் வடிசாலை அனுமதிப்பத்திர காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திண்மக் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரினை வெளியேற்றுவதற்கான நடைமுறையில் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்ளவது எவ்வாறு என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பமத்திரம் இல்லாது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான காரணமாவது அரசாங்க அணுசரணையின் அடிப்படையில் புதிய சேதனப் பசளை செயற்திட்டத்தை ஆரம்பித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் வரையறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதனை உரிய ஆண்டில் பூர்த்திசெய்யலாம் எனவும் அதற்கிணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினை அந்த ஆண்டிற்குள்ளேயே பெற்றுக்கொள்ளலாம் எனவும் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. | தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | சட்டரீதியான வியாபாரத்திற்கு வசதிகளை வழங்குவதற்கும் சட்டத்திற்கு முரணான வியாபாரத்தை சுற்றிவளைப்பதற்கும் ஒரு ஆபத்து முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பாக திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை அவ்வாறான முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடக்கமாக அந்த ஆபத்தான துறைகளை இனங்கண்டு அவற்றினை ஆய்வு செய்வதற்காக உரிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக விசேட அறிவினைக் கொண்ட தகமையுள்ளவர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது. நடைமுறையை ஆய்வு செய்யும் செயற்பாடானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் RASED கணனி ஸ்தாபிப்பதனை முன்னிட்டு துரிதப்படுத்துல், ஒட்டுமொத்த மதுபான | ஆபத்து முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கல் சங்கிலியை மேற்பார்வைக்கும் பரீட்சிப்பிற்கும் உட்படுத்துதல், கணக்காய்வு பரீட்சிப்புக்கள், தரக்கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கை சட்டரீதியான மதுபான உற்த்தியை நேரடியாக மேற்பார்வை செய்தல், அனுமதிப்பத்திரம் இல்லாத மற்றும் குறைவான பிரதேசங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அனுமதிப்பத்திரம் இன்றி செயற்படுகின்ற புதிய துறைகளுக்காக புதிய மதுவரி அனுமதிப் பத்திர முறைமையாக ஸ்தாபித்தல், புதிய மதுவரி அதிகாரச் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் என்பவற்றிற்கு தேதவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | நியம தரமற்ற மதுபான உற்பத்தியின் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் குறைப்பதற்காக உள்நாட்டு மதுபானங்கள் மற்றும் உள்நாட்டில் தயாரித்த வெளிநாட்டு மதுபானங்கள், தானிய மதுபானங்கள் என்பவற்றிற்காக இலங்கை நியமங்கள் நிறுவனம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து 11 மதுபான வகைகளுக்காக 16 வரையறைகளின் கீழ் நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் நியமங்களுக்கு இணங்க உற்பத்தி ஒழுங்குவிதிகளை அமுல்ப்படுத்தக்கூடிய வகையில் நியமங்கள் சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தல் | வர்த்தமானி அறிவித்தலானது தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நியமங்கள் மற்றும் அது சம்பந்தமான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய கடிதங்களும் அந்த நியமங்களும் ஒரு குறிப்பாக அனைத்து மதுபான உற்பத்திசாலை அனுமதிப்பத்திரதாரர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கள்ளு சம்பந்தமாகவும் சகே மற்றும் வயினுக்கான | நியமங்களை தயாரித்து அந்த நியமங்களுக்கு இணங்க மதுபானங்கள் தயாரிக்கப்படுகின்றது என்பதனை மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கள்ளு, சகே, வயின் என்பவற்றிற்காக நியமங்கள் இதுவரை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக அது சம்பந்தமாக முறையான ஒழுங்குபடுத்தலும் தாமதமடைந்து காணப்பட்டது. | நியமங்களைத் தயாரித்து அந்த நியமங்களை அமுல்ப்படுத்துமாறு வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பித்தலையும் துரிதப்படுத்துவதற்கு மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | மதுவரி திணைக்களத்தின் முக்கிய கடமையான சட்டத்தை அமுல்ப்படுத்தும் செயற்பாட்டு குறிக்காட்டியாக ஈடுபடுத்தப்பட்ட கைத்தொழில் குற்றங்கள் மற்றும் குற்ற சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கையை முடியுமான அளவில் 50,000 எல்லைக்கு அண்மையில் வைத்திருக்கும் தேவைப்பாடு நிதி அமைச்சினால் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இனணங்க ஒரு காலாண்டிற்கு 10,434 வீதம் 41,736 குற்ற சுற்றிவளைப்பு இலக்கானது மிளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அது முதலாவது காலாண்டின் போது குற்றச் சுற்றி வளைப்பு இலக்கு 41,108 வரை 628 ஆல் அதிகரித்தும் இரண்டாவது காலாண்டின் போது குற்றச் சுற்றிவளைப்பு இலக்கு 32,886 ஆக 8,222 ஆல் குறைத்தும் மீண்டும் 27,748 வரை எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிக்கப்படல், பொருளாதார ரீதியான பின்னடைவு என்பவற்றின் காரணமாக 5,138 ஆல் குறைந்து திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குற்றச் சுற்றி வளைப்புக்கள் 35,381 அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார சமூக மற்றும் காநிலை காரணங்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு தேவைப்படுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிக்கப்படல் பொருளாதார பின்னடைவு என்பவற்றினால் சுற்றிவளைப்பு இலக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது திருத்தப்பட்டிருந்தது. | மதுவரித் திணைக்களத்தின் முக்கிய கடமையான சட்டத்தை அமுல்ப்படுத்தும் செயற்பாட்டுக் குறிகாட்டியாக ஈடுபடுத்தப்பட்ட கைத்தொழில் குற்றம் மற்றும் குற்றங்களின் சுற்றிவளைப்பு எண்ணிக்கையை முடியுமான அளவு 50,000 எல்லைக்கு அண்மித்ததாக வைத்திருக்கும் ஆதவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (எ) | மதுவரித் திணைக்களத்தின் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள 04 அதிகாரச் சட்டங்களின் கீழ் மீளாய்வாண்டில் மேற்கொண்ட குற்ற சுற்றிவளைப்புக்கள் முன்னைய அண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குற்ற | நாட்டில் காணப்பட்ட கலவர மற்றும் நிச்சயமற்ற நிலைமையில் நாடு முழுவதும் சட்டத்தை அமுல்ப்படுத்தும் செயற்பாட்டை | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றிவளைப்புக்கள் 3,727 ஆல் அல்லது 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளல் அதிக வளத்தட்டுப்பாட்டுடன் மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்கள் சவால் நிலைமையின் கீழ் சுற்றிவளைப்புக்களின் அளவில் குறைவு ஏற்பட்டிருந்தமையை நியாயப்படுத்தக்கூடியதாக இருந்தது. | |
| (ஏ) | 2022 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட கைதொழில் குற்ற சுற்றிவளைப்புக்களின் அளவு 3,600 ஆனது காலாண்டு ரீதியான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் முறையே 1,244 ஆல் அதிகரித்து மீண்டும் 1,574 ஆல் குறைத்து 3,270 ஆக திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 4,155 குற்ற சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கைத்தொழில் குற்ற இலக்கினை அடைந்து கொள்வது தொடர்பான செயல்முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது மதுவரி நிலையங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த இலக்குகள் 33 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்தும் இலக்குகளை நிறைவேற்றுதல் 100 சதவீதத்திற்கு மேல் குறைவடைந்திருந்த 13 மதுவரி நிலையங்கள் அவதானிக்கப்பட்டன. | அவதானிப்புக்கள் சரியானவையாகும். | 2022 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் 2022 வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது 2023 யூன் மாதம் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் 7.1 ஆம் அத்தியாயத்தின் இணக்கப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் 8 இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. மேலும் அதன் 2.8 மற்றும் 9 ஆம் இலக்க உப தலைப்புக்களின் கீழுள்ள தொடர் இலக்கம் 2.1, 2.3, 8.1 மற்றும் 9.1 இலுள்ள விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அந்த விடயங்களுக்கு இணக்கமற்ற நிலைமை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

2022 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 16 கணக்காய்வு ஐய வினாக்களில் 04 ஐய வினாக்களுக்கு 2023 யூன் 15 ஆந் திகதி வரையும் பதில் அனுப்பப்படவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் 2030 இன் பிரகாரம் மதுவரித் திணைக்களத்தின் 15 குறிக்கோள்கள் தொடர்பாக அடைந்துகொள்ளப்பட வேண்டிய 37 இலக்குகளில் மீளாய்வாண்டிற்கு 05 குறிக்கோள்களின் கீழ் 07 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்வது சம்பந்தமாக பாராளுமன்ற கணக்கு குழு கூட்டங்களின் போது கவனம் செலுத்தப்பட்டு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. ஒரு ஆய்வுகூடத்தினை ஸ்தாபித்தல் மற்றும் கழிவுப் பொருள் உருவாகுவதனை தவிர்ப்பதற்காக உத்தேச சுற்றாடலுக்குச் சாதகமான உற்பத்தி நடைமுறையினை ஸ்மதாபித்தல் மற்றும் உருவாகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றினை மீள்சுழற்சி செய்தல் முதலிய துறைகளுக்குரிய செயல்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் மதுபானங்களுக்காக முறையாக நியமங்களை அறிமுகப்படுத்துதல் 65% இனாலும் ஆய்வு கூடங்களை ஸ்தாபித்தல் 40% களினாலும் வருடாந்தம் மதுபான தொழிற்சாலைகளிலிருந்து கழிவுப் பொருள் உருவாகுவதனை தவிர்ப்பதற்கான உத்தேச சுற்றாடலுக்குச் சாதகமான உற்பத்தி நடைமுறைகளை ஸ்தாபித்தல் மற்றும் உருவாகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தலும் அவற்றினை மீள்சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல் 85% இனாலும் செயல்முன்னேற்றத்தினைப் பெற்றிருந்தது. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் கீழான 15 குறிக்கோள்களில் இனங்காணப்பட்ட 05 குறிக்கோழ்களின் கீழான 07 இலக்குகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக வருடாந்தம் மதிப்பீடு செய்தல் வேண்டும். |

## 5. நல்லாட்ச்சி

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மதுவரி தலைமை அலுவலகத்தில் பேணப்பட்டு வருகின்ற 1913 செயற்பாட்டு அறைக்கு 2022-01-01 இலிருந்து 2022-12-31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 1,552 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் அவற்றில் 210 முறைப்பாடுகள் விசேட செயற்பாட்டுப் பிரிவிற்கும் 1,342 முறைப்பாடுகள் பிராந்திய அலுவலகங்களுக்கும் ஆனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் பிராந்திய அலுவலகங்கள் 419 முறைப்பாடுகளுக்கும் விசேட செயற்பாட்டுப் பிரிவு 48 முறைப்பாடுகளுக்கும் வெற்றிகரமாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. | 1913 மதுவரி செயற்பாட்டு அறைக்கான பொது மக்கள் முறைப்பாடுகள் சம்பந்தமான முறைப்பாடு ECMS முறைமையின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு 3 மாத காலத்திற்குள் கிடைக்காத சந்தர்ப்பங்களின் போது மதுவரி ஆணையாளர் சட்டத்தை அமுல்ப்படுத்துபவர்களின் கையொப்படுத்துடன் விடயத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கும் நடைமுறையும் எங்களால் பேணப்படுகின்றது. | 1913 மதுவரி செயற்பாட்டு அறைக்கு கிடைக்கின்ற முறைபாடுகள் சம்பந்தமாக துரிதமாக செயற்பாட்டு சேவைகளை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2020 இலிருந்து மீளாய்வாண்டு வரை உரிய 53 தகவல்களை வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 45 வேண்டுதல்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனபது அவதானிக்கப்பட்டது. | சட்டப் பிரிவிற்கு 2020/2021 ஆண்டில் 37 தகவல் வேண்டுதல்கள் கிடைத்து உரிய பதில் / தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களைத் தெரிந்துகொள்ளும் அதிகாரச் சட்டத்தின் கீழ் பொது மக்களால் கேட்கப்படும் தகவல்களுக்காக முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற தகவல்களை முறைப்படியாக வழங்குதல் |

5.2 **உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் 22 துறைகள் தொடர்பாக 36 கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தும் 17 அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்திருந்தன. அந்த அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த கணக்கு நிருவாகம், செயற்பாடுகள், வருமானங்கள் சட்டத்தை அமுல்படுத்துதல் முதலிய துறைகளின் கட்டுப்பாட்டு முறைமைகளிலுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்காக முகாமைத்துவம் எடுத்த நடவடிக்கைகள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2022-09-15 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டு 17 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு அந்த அனைத்து கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் அரசாங்க கணக்காய்வு பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்காக முகாமைத்துவத்தினால் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**6 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட மட்டம் தொடர்பான மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் பதவி 03 ஆண்டுகளாகவும் 01 மதுவரி ஆணையாளர் பதவி 04 ஆண்டுகளாகவும் 05 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள் 01 ஆண்டிற்கும் 04 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமாகவும் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக கடமையை மேற்கொள்ளலின் கீழ் 05 உத்தியோகத்தர்களின் | தகமைகளைப் பூரணப்படுத்திய உத்தியோகத்தர்கள் இல்லாமையின் அடிப்படையில் திணைக்களத்தின் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் பதவி, 02 மதுவரி ஆணையாளர் பதவிகள், 07 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் கணப்பட்டதுடன் கடமைகளை நிறைவேற்றுவதன் கீழ் 04 | திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலமும் பதில் கடமை பார்த்தலின் கீழ் ஒரு உத்தியோகத்தரின் மூலமும் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. மீளாய்வாண்டின் இறுதிவரை பிரதி மதுவரி ஆணையாளர் (நிருவாகம்) பதவிக்குரிய கடமைகள் எந்த உத்தியோகத்தராலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களும் பதில் கடமை பார்த்தலின் கீழ் 03 உத்தியோகத்தர்களும் கடமைகளை நிறைவேற்றுவார்கள் பிரதி மதுவரி ஆணையாளர் (நிருவாகம்) பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. | |
| (ஆ) | திணைக்களத்தின் செயற்பாட்டிற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சிரேஷ்ட மட்டத்திலுள்ள 38 பதவிகள் மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள 77 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இது திணைக்களத்தின் நிகழ்கால செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட மட்டம் - 8 மதுவரி அத்தியட்சகர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்ககப்பட்டு வருகின்றது. 05 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.<br>மூன்றாம் மட்டம் - 49 மதுவரி பரீட்சகர்கள் பதவிகள் நிரப்புவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து விண்ணப்பங்களை கோரும் அறிவித்தலின் வரைபு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |